தினமலர்
நிறுவனர்: டி. வி. ராமசுப்பையர்

## கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டில் தக்காளி விலை கிடு...கிடு... உயர்வு

ஏப்ரல் 23,2010,01:49



கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டில், வெளி மாவட்டங்களில் இருந்து தக்காளி வரத்து வருவதால், தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டிற்கு, உள்ளூர் கிராமப்பகுதியில் இருந்து வரத்து முற்றிலும் குறைந் துவிட்டது. இதனால், தற்போது, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதி மார்க்கெட்டில் இருந்து வியாபாரிகள் ஒரு கிலோ தக்காளியை ஐந்து ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்து வந்து, கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டில் நடக்கும் ஏலத்தில் தக்காளிளை ஏலம் விடுகின்றனர். இப்பகுதியில் தக்காளி சீசன் நிறைவடைந்துவிட்டதால், உள்ளூர் விவசாயிகள் தக்காளி சாகுபடி குறைவாகவே உள்ளது. இதனால், வெளி மாவட்டத்தில் இருந்து வரும் தக்காளிக்கு கடும் போட்டி நிலவுவதால், தக்காளி விலை இரண்டு மடங்காக விலை உயர்ந்துள்ளது. நேற்று நடந்த ஏலத்தில், ஒட்டன்சத்திரம், உடுமலைபேட்டை பகுதி மார்க்கெட்டில் எடுக்கப்பட்ட 15 கிலோ எடையுள்ள தக்காளி பெட்டிகள் ஏலத்தில் வைக்கப்பட்டது. தக்காளிகளை உள்ளூர் வியாபாரிகளும், கேரளா வியாபாரிகளும் போட்டி போட்டு ஏலத்தில் எடுத்ததால், ஒரு கிலோ தக்காளி ரூ.12க்கு ஏலத்தில் சென்றது.

இதனால், வெளி மாவட்டத்தில் இருந்து தக்காளியை எடுத்து வந்த வியாபாரிகளுக்கு இரண்டு மடங்கு விலை கிடைத்ததால், மகிழ்ச்சியடைந்துள்ளனர். தினசரி மார்க்கெட்டில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை மட்டுமே தக்காளி சீசன், அதன்பின், தக்காளி வரத்து இல்லாமல், வெறிச்சோடி காணப்படும். ஆனால், இந்த ஆண்டு வெளி மாவட்டத்தில் இருந்து தக்காளி வரத்து அதிகரித்தால், தினசரி மார்க்கெட்

பிசியாகிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தினமணி
Friday, April 23, 2010 9:52 AM IST

# நவரைப் பட்டம் நெல்லுக்கு மேலுரம்

First Published : 21 Apr 2010 10:31:53 PM IST

கடலூர், ஏப். 21: நவரைப் பட்ட நெல் சாகுபடி செய்திருக்கும் விவசாயிகளுக்கு கீழ்காணும் ஆலோசனைகளை, கடலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ச.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

அவரது செய்திக்குறிப்பு:

நவரைப்பட்ட நெல் பயிருக்கு மேலுரம் அவசியம் இடவேண்டும். குறுகியகால நெல் ரகங்களுக்கு மண் பரிசோதனை சிபாரிசுப்படி உரமிட வேண்டும்.

அல்லது வேளாண் துறை சிபாரிசுப்படி, ஏக்கருக்கு 50- 20- 20 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்து தரவல்ல ரசாயன உரமிட வேண்டும்.

அடியுரமாக 25 சதவீதம் தழைச்சத்து, 100 சதவீதம் மணிச்சத்து, 50 சதவீதம் சாம்பல் சத்து இடவேண்டும்.

மீதம் உள்ள தழைச்சத்து 75 சதவீதம் சாம்பல் சத்து 50 சதவீதம் ஆகியவற்றை மேலுரமாக இடவேண்டும்.

நட்ட 15 நாளில் தூர்கட்டும் பருவத்தில் மேலுரமாக 10 கிலோ தழைச்சத்து தரவல்ல யூரியா உரம் 22 கிலோ இடவேண்டும்.

2-வது மேலுரமாக நட்ட 30 நாளில் கதிர்முனை உருவாகும் பருவத்தில் 10 கிலோ தழைச் சத்துக்கு யூரியா 22 கிலோவும்,

சாம்பல் சத்து 10 கிலோ தரவல்ல

பொட்டாஷ் உரம் 17 கிலோவும் இடவேண்டும்.

3-வது மேலுரமாக நட்ட 45 நாளில் பூக்கும் பருவத்தில் 10 கிலோ தழைச்சத்து தரவல்ல யூரியா 22 கிலோ இடவேண்டும். மேலுரம் இடும்போது நிலத்தில் உள்ள நீரை வடித்து, போதுமான ஈரப்பதம் இருக்கும்போது உரமிட வேண்டும். மேலுரம் இட்ட 24 மணி நேரம் கழித்து நீர்பாய்ச்ச வேண்டும்.

நவரை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் சரியான தருணத்தில் மேலுரமிட்டு, கூடுதல் மகசூல் பெற்றுப்

பயனடையக் கேட்டுக் கொள்கிறேன் என்று செய்திக் குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

# துளசி பயிரிட ஏற்ற காலம்

எஸ். முகமது கவுஸ்
First Published : 22 Apr 2010 12:00:00 AM IST



திருவள்ளூரை அடுத்த கந்தன் கொல்லை கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள துளசி செடிகள்.

திருவள்ளூர், ஏப். 21: மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை துளசி சாகுபடி செய்தால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்.

தற்போதுள்ள பருவ காலத்துக்கு ஏற்றவாறு விவசாயிகள் துளசி சாகுபடியை மேற்கொள்ளலாம். துளசி சாகுபடி செய்ய மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதம் வரை ஏற்ற பருவமாகும். துளசி நடவு செய்யும் போது 45 சென்டி மீட்டருக்கு 30 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும். சாகுபடியின் போது ஒரு ஹெக்டேருக்கு தழைச்சத்து 150 கிலோ, மணிச்சத்து 75 கிலோ, சாம்பல் சத்து 75 கிலோ என்ற விகிதத்தில் உரமிட வேண்டும்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 25 டன் வரை அறுவடை செய்யலாம்.

துளசி இலைகளில் ""நீத்தல் யூஜினல்" என்ற மருந்து எடுக்கப்படுகிறது. இந்த மருந்து அனைத்து வகை அழகு சாதன கிரீம்கள், சோப், பவுடர், ஐஸ்கிரீம், பிஸ்கெட் போன்ற பொருள்களில் முக்கிய மூலப்பொருளாக சேர்க்கப்படுகிறது.

÷இது தவிர சாமிக்கு வைக்கப்படும் அபிஷேக பொருள்களில் துளசி இலையும் முக்கிய இடத்தில் உள்ளது. துளசி செடியில் இருக்கும் ஒரு வகை வாசனையால் விஷப்பூச்சிகள் துளசி தோட்டத்துக்கு வருவதில்லை. மேலும் துளசி தோட்டத்தில் இருந்து வரும் காற்றை நாம் தொடர்ந்து சுவாசித்தால் உடல் ஆரோக்கியமும் கிடைக்கும். இதைக் காரணமாக வைத்துதான் முன்னோர்கள் வீட்டின் முன் துளசி மாடத்தை வைத்து வணங்கி வந்தனர். ÷தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் எல்லாபுரம் ஒன்றியம், திருவள்ளூர் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் மட்டும் அதிகளவில் துளசி பயிரிடப்பட்டு வருகிறது. உவர்ப்பு மண்ணைத் தவிர அனைத்து வகை மண்ணிலும் துளசி செடியை பயிரிடலாம்.

குறுகிய காலத்தில், குறைந்த முதலீட்டில் துளசி சாகுபடி செய்தால் அதிக லாபம் ஈட்ட முடியும் என தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

---

# விதைகளைப் பாதுகாக்க புதிய முறை

ஜி.சுந்தரராஜன்
First Published : 22 Apr 2010 12:00:00 AM IST

Last Updated : 22 Apr 2010 12:46:47 AM IST



குறைந்த எடையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள விதைப் பத்தையம்.

சிதம்பரம், ஏப். 21: கடந்த சில மாதங்களாக தமிழகத்தில் மரபணு விதைகள் பயிரிடுவது குறித்த விவாதம் வெற்றிகரமாக முடிந்து சிறு மற்றும் குறு விவசாயிகள், விவசாயப் பிரதிநிதிகளின் தொடர் கோரிக்கையை ஏற்று மத்திய, மாநில அரசுகள் அவற்றுக்கு தடை விதித்துள்ளன.

இந்நிலையில் பாரம்பரிய விதை ரகங்களை பாதுகாப்பது ஒரு முக்கிய தேவையாகவும், பிரச்னையாகவும் உருமாறிவிட்டது. இத்தகைய சூழலில் பாரம்பரிய நாட்டு ரக விதைகளை விவசாயிகள் தங்கள் கிராமங்களில் பாதுகாத்து அடுத்த பருவத்துக்கு பயன்படுத்தும் நோக்கில் தற்போதைய புதிய விதைப் பாதுகாப்பு பத்தையம் (New seed granary) உருவாக்கப்பட்டுள்ளது.

விதை பத்தையத்தின் சிறப்புகள்: கடந்த பல ஆண்டுகளாக தமிழகத்தில் விதை நெல், பயிர்களை சேமிக்க மண், மரம் மற்றும் இரும்பு பத்தையங்களே கிராமப் புறங்களில் அதிகளவு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பல நடைமுறை சிக்கல்களை கொண்ட பாரம்பரிய விதைப் பத்தையங்களுக்கு ஒரு நல்ல மாற்றாக புதிய முறை விதைப் பத்தையம் உருவாக்கப்பட்டுள்ளது. மண் மற்றும் மரச் சீவல்கள் அல்லது மரத்துகள்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இப்புதிய நவீன விதை பத்தையங்களின் எடை மிகக்குறைவு. இவற்றை அடுக்குகளாக உருவாக்கி உள்ள காரணத்தால் எளிதில் பிரித்துக் கொள்ளலாம். மாட்டிக்கொள்ளவும் செய்யலாம்.

இப்புதிய முறை விதைப் பத்தையத்தை தேவை இல்லாத காலங்களில் எளிதாக பிரித்து பரண்களில் அடுக்கி வைத்துக் கொள்ளலாம். தேவைப்படும் போது மீண்டும் எடுத்து பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

÷செயல்பாடுகள்: புதிய விதை முறை பத்தையத்தில் விவசாயிகள் அடுத்த பருவத்துக்கு அல்லது ஆண்டுக்கு தேவையான விதை நெல், பயிர் வகைகளை நன்றாக காய வைத்து வேப்ப இலை, நொச்சி இலையை கலந்து சேமித்து வைக்கின்றனர். பின்னர் பத்தையத்தை மூடி ஒரு அறையின் ஓரத்தில் வைத்து விடுகின்றனர்.

தொடர் மழை மற்றும் வெயில் காலத்தில் ஈரப்பதத்தில் இருந்து விதைகளை பாதுகாத்து பூச்சி தாக்குதல்களையும் தடுக்கிறது. நன்றாக வெயில் வரும் காலங்களில் பத்தையத்தை பிரித்து காய வைத்து விதைகளை பாதுகாக்கும் நடைமுறையும் உள்ளது.

சில சமயங்களில் பருவம் தப்பி அல்லது சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள முடியாத நடைமுறை சூழல் எழும்போது பத்தையத்தில் உள்ள விதை நெல்லை வெளியே எடுத்து

சுத்தப்படுத்தி பழைய வேப்ப இலைகளை, நொச்சி இலைகளை அகற்றிவிட்டு புதிய இலைகளைப் போட்டு மீண்டும் விதை நெல்லை பாதுகாக்கும் நடைமுறை பின்பற்றப்படுகிறது.
÷பிற பயன்கள்: தற்போதைய புதிய முறை விதை பத்தையம் அளவுக்கு ஏற்றவாறு ரூ.800 முதல் ரூ.1200 வரை வேளாண் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகிறது.
 விவசாயிகள் ஒரு முறை முதலீடு செய்தால் போதும் பல ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக பயன்படுத்த முடியும். விவசாயிகள், பண்ணை மகளிர் தங்களின் பாரம்பரிய விதைகளை இப்புதிய முறை விதை பத்தையங்கள் வாயிலாக எளிதில் பாதுகாக்க முடியும்.
 எனவே குறைந்தளவு முதலீட்டில், நீண்ட நாள் விதைகளை பாதுகாத்து நமது பாரம்பரிய சொத்துகளை சேமித்து வைக்கலாம்.
 இப்புதிய விதை முறை விதை பத்தையங்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் வேளாண் பணிகளை செய்து விவசாயிகள் அதிக வளம் பெற முடியும் என்கிறார் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன்.

---

## தனியார் தொழிற்சாலைகளின் கழிவால் விவசாயம் பாதிப்பு

First Published : 21 Apr 2010 11:07:54 AM IST

பொள்ளாச்சி, ஏப். 19: பொள்ளாச்சி அருகே தனியார் தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகி காற்றில் பறக்கும் கழிவுகளால் விவசாயம் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.
பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட குள்ளக்காபாளையம், குரும்பபாளையம் மற்றும் போத்தனூர் உள்ளிட்ட கிராமங்களில் விவசாய பூமிகள் நிறைந்துள்ளன. இவற்றின் மத்தியில் தனியாரின் 2 மெட்டல் கம்பெனிகள் உள்ளன.
இக்கம்பெனிகளில் இருந்து வெளியாகிக் காற்றில் பறக்கும் மெட்டல் கழிவுகளால் விவசாயம் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.
இக்கம்பெனிகளில் இருந்து வெளியாகும் கழிவுநீர் பி.ஏ.பி. கால்வாய் வழியாக வெளியேற்றப்படுகிறது. இதனால் மக்களுக்குப் பிரச்னை ஏற்படுகிறது. கழிவுத் துகள் படிந்த இலைதழைகளைக் கால்நடைகள் உண்பதால் வயிற்றுப் போக்கு ஏற்படுகிறது. இக்கழிவுத் துகள்கள் காற்றில் பறந்து கிணறுகளில் கலக்கிறது. குடிநீர் ஆதாரமாகச் செயல்பட்ட கிணறுகள் இப்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.
ஏகமாகக் கொட்டப்படும் கழிவுப் பொருள்கள் காற்று மற்றும் மழைக் காலங்களில் விவசாய நிலங்களில் படிகிறது.  பி.ஏ.பி. கால்வாய் ஓரத்தில் கழிவுத்துகள்கள் கொட்டப்படுகின்றன (படம்). இதனால் மழைக் காலங்களில் கழிவுத்துகள்கள் கால்வாயில் கலப்பதால் நிலம் பாதிப்படைகிறது.
 இக்கழிவுத் துகள்களை வெளியேற்றும் நிறுவனங்கள் மீது மாவட்ட ஆட்சியர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இப்பகுதியைச் சேர்ந்த மக்களும் விவசாயிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---